


**30. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பொதுத்தேர்வு முறைகேடுகள் சட்டத்திருத்த மசோதா மாநிலங்களவையில் இன்று பிற்பகல் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

2. தமிழ்நாட்டில் உலகளாவிய திறன், ஆராய்ச்சி மேம்பாடு மையங்கள், உற்பத்தி திட்டங்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் திரு. விஜய் முன்னிலையில் இன்று சென்னையில் கையெழுத்தாயின.

3. கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின், இளநிலை மருத்துவ பட்டப் படிப்பு சேர்க்கைக்கான தரவரிசை பட்டியலை மாநில அமைச்சர் திருமதி. கமலி இன்று வெளியிட்டார்.

4. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் காணொலி கூட்டம் இன்று நடைபெறுகிறது.

5. சீன தைபே ஓப்பன் பேட்மிட்டன் ஒற்றையர் காலிறுதிக்கு, தன்வீ ஷர்மா, உன்னதி ஹுடா, தேவிகா சிஹாக் உள்ளிட்டோர் முன்னேறியுள்ளனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

பொதுத்தேர்வு முறைக்கேடுகள் சட்டத்திருத்த மசோதா மாநிலங்களவையில் இன்று பிற்பகல் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் இதனை அவையில் தாக்கல் செய்கிறார்.

முன்னதாக அவையில் இன்று பூஜ்ஜிய நேரத்தின் போது பேசிய அவைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பொதுத்தேர்வு குளறுபடிகள் தடுப்பு மசோதா குறித்த விவாதத்திற்கான நோட்டீஸை தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த மசோதா தொடர்பான நகல்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மசோதா நேற்று மக்களைவையில் நிறைவேறியது.

தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை,

10 கோடி ரூபாய் வரை அபராதம் மற்றும் சம்மந்தப் பட்டவர்களின் சொத்துக்கள் முடக்குவதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றிற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

காவல் நிலையத்தில் தகவல்கள் பதிவு செய்த இரண்டு மாதங்களிலேயே முறைக்கேடுகள் தொடர்பான புலனாய்வை முடிக்கவும்,

குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்த மூன்று மாதங்களுக்குள் விசாரணையை முடிப்பதற்கான அம்சங்களும் இதில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே நீட் விவகாரத்தில், போராட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கர் மீது, காவல்துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் பிரச்சனையில் எதிர் கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

உச்சநீதி மன்றம்

நீட் விவகாரத்தில், டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கர் மீதான, காவல் துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுவது தொடர்பான வழக்கில் அதிரடி காவல் படையினர் தங்களது வெடி பொருட்கள் பிரயோக பதிவேட்டை பாதுகாப்பாக வைத்திருக்க உச்சநீதிமன்றம் இன்று அறிவுறுத்தியுள்ளது.

சட்ட ஒழுங்கு பிரச்சனைகளின் போது உலோக குண்டுகள் பிரயோகத்தை தடை செய்ய வேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிமன்றம் அசாதாரண காலங்களில் இவற்றை பிரயோகிக்க காவல் துறையினருக்கு அதிகாரம் உள்ளதாக தெரிவித்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையங்கள், ஆராய்ச்சி மேம்பாடு மையங்கள், உற்பத்தி திட்டங்கள் தொடர்பான பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர்

திரு. விஜய் முன்னிலையில், இன்று சென்னையில் கையெழுத்தானது.

தமிழகத்தின் முதல் சர்வதேச பல்கலைக்கழக வளாகத்தை நிறுவதற்கான, உலகளாவிய முன்னணி நிறுவனங்களுடனும் ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்படி சென்னையில் 125 கோடி ரூபாய் முதலீட்டில் மேற்கு ஆஸ்திரேலியா பல்கலைக்கழகத்தின் வளாகமும்,

காஞ்சிபுரம் சிப்காட் தொழிற்பூங்காவில் 300 கோடி ரூபாய் மதிப்பீடிலான உற்பத்தி நிலையமும் அமையவுள்ளன.

ஸ்விட்சர்லாந்த், ஜெர்மனி நாடுகளின் ஆராய்ச்சி, மேம்பாட்டு மையங்களும் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட உள்ளன.

இந்த ஒப்பந்தங்கள் மூலம் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த முதலீடுகள் தமிழக இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதோடு, உலகளாவிய திறன் மையங்கள், ஆராய்ச்சி மேம்பாடு உயர்க்கல்வி மற்றும் மேம்பட்ட உற்பத்தி துறைகளுக்கான சர்வதேச மையமாக தமிழகத்தை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்காற்றும் என்று முதலமைச்சர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையாரின் 141-வது பிறந்தநாள் இன்று

கொண்டாடப்படுவதை ஒட்டி முதலமைச்சர் விடுத்த செய்தியில் அன்னாரது உயரிய லட்சியங்களும், பெண் முன்னேற்ற செயல்பாடுகளும் என்றென்றும் தமிழ் மண்ணில் நிலைத்திருக்கும் என புகழாரம் சூட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கமலி

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின், நடப்பு கல்வியாண்டிற்கான இளநிலை கால்நடை மருத்துவ பட்டப் படிப்புகளுக்கு தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களின் தரவரிசை பட்டியலை மாநில கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி. கமலி இன்று வெளியிட்டார்.

பால்வளம், கோழிஇன, இளநிலை தொழில்நுட்ப பட்டப்படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலும் இன்று வெளியிடப்பட்டது.

தரவரிசை பட்டியலை இணையதளம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

மாணாக்கர் சேர்க்கைக்கான கலந்தாய்வு விவரங்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அரசு கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

காவிரி ஆணைய கூட்டம்

காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டம் காணொலி வாயிலாக இன்று மீண்டும் நடைபெறுகிறது.

தமிழகத்திற்கு கர்நாடகா தண்ணீரை திறப்பது குறித்த ஒழுங்காற்று குழுவின் பரிந்துரை மீது இன்றையக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரே மாதத்தில் நடைபெறும் இரண்டாவது கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆதவ் அர்ஜுனா

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் 13 முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதிய ஆணைகளும்,

3 பேருக்கு குடும்ப ஓய்வூதிய ஆணைகளும்

ஓய்வூதிய நிலுவைத்தொகையாக 14 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் மாநில விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ்அர்ஜுனா இன்று சென்னையில் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

பிரதமரின் சூரிய மின் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 66 மின் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கவிதா தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்களை சார்ந்தோருக்கு நிராகரிக்கப்பட்ட சிறார்களுக்கு மட்டுமே

தொகுப்பு நிதி, கல்வி உதவித்தொகை அனுமதிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு கைத்திற தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்பில் 2026-27ம் ஆண்டிற்கான பூம்புகார் விருதுபெற தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர் திருமதி. காயத்ரி தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் மற்றும் தொழில் பழகுநர் பயிற்சி வாரியம் இணைந்து ஓராண்டுகால தொழில் பழகுநர் பயிற்சி வழங்கவுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்க அடுத்தமாதம் 28-ம் தேதி கடைசிநாளாகும்.

கடலூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடர்பான புகார்களை தெரிவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உதவி மையம் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் புத்தக திருவிழா நாளை தொடங்கி வரும் 11-ம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் 230 அரங்குகள் அமைக்கப் பட்டுள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், பொது சேவை மையங்கள் மூலம் நாளைக்குள் பயிர்காப்பீடு செய்துகொள்ள வேண்டும் என வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டம் பழனி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் சார்பிலான சிறப்பு விழிப்புணர்வு கண்காட்சியை ஏராளமான மாணாக்கர் பார்வையிட்டனர்.

இக்கண்காட்சியில் விண்வெளி ஆய்வு மையத்தின் தயாரிப்புகளான சந்திரயான்-2, 3 திட்டங்களின் மாதிரிகள், விண்வெளி ரோவர், வாகனங்கள்,செயற்கை கோள்கள், விண்வெளி வீரர்களின் மாதிரிகள் மாணவ மாணவிகளை பெரிதும் ஈர்த்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

நெல்லை

நெல்லை மாவட்டத்தில் காவலர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கான சிறப்பு மருத்துவ முகாமை நெல்லை சரக காவல்துறை துணைத்தலைவர் திரு. திருநாவுக்கரசு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், இங்கிருந்து பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் இத்தகைய மருத்துவ முகாம்கள் நடத்த திட்டமிடப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

குற்றாலம்

தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் தொடர்மழைக் காரணமாக குற்றாலம் மெயின்அருவி, ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது

❖❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டலத்தில் பலவீனமான காற்றழுத்த பாதை நிலவுவதால் நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் இடி மின்னல் பலத்த காற்றுடன் கூடிய கனமழை இன்று பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை, கோவை, திருநெல்வேலி மாவட்ட மலைப்பகுதிகள் நீலகிரி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலின் சில பகுதிகள் மத்திய மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 3-ம் தேதிவரை இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

சீன தைபே ஓப்பன் பேட்மிட்டன் ஒற்றையர் காலிறுதிக்கு, தன்வீ ஷர்மா, உன்னதி ஹுடா, தேவிகா சிஹாக் உள்ளிட்டோர் முன்னேறியுள்ளனர்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றுகளில் தன்வீஷர்மா, தேவிகா இந்தோனேஷிய வீராங்கனைகளையும்,

உன்னதிஹுடா – தன்யாஹேமந்தையும் வென்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖